**செ. கு. எண்**: 250 **நாள்**: 11.07.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - **11.7.2012**

நாகப்பட்டினம் மாவட்டம், பாகசாலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு.M. ரவிச்சந்திரன் அவர்கள் 5.7.2012 அன்று வாகன தணிக்கையின் போது, எரிசாராயம் கடத்தி வந்த கார் ஒன்றை பிடிக்க முயன்ற போது, அந்த கார் ஓட்டுநர் காரை அதிவேகமாக எடுத்து, தலைமைக் காவலர் திரு. ரவிச்சந்திரன் மீது ஏற்றியதில், அவர் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி 7.7.2012 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிக்க துயருற்றேன்.

இந்த சம்பவத்தில் தக்க நடவடிக்கை எடுக்க காவல் துறைக்கு நான் உத்தரவிட்டதன் அடிப்படையில் அம்பாசிடர் காரின் ஓட்டுநர் திரு. கலைசெல்வன் கைது செய்யப்பட்டுளளார். அம்பாசிடர் கார் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கில் துரித விசாரணை மேற்கொண்டு குற்றவாளிகள் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யவும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

தலைமைக் காவலர் திரு. ரவிச்சந்திரன் பணியில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்தார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கின்றது. திரு. ரவிச்சந்திரன் அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடமையாற்றிக் கொண்டிருந்த போது காலமான தலைமைக் காவலர் திரு. M. ரவிச்சந்திரன் அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**